## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No. 60/2021

PW3 வெங்கடேசன் நாள் 06.02.2024

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு எதற்காக போடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். இந்த வழக்கை ஆமினாபிபி தாக்கல் செய்துள்ளார். யார் பெயரில் வழக்கு போடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. கீதா என்பவர் ஆமினாபிவியின் மகள் ஆவார். சினேகா என்பவர் கீதாவின் மகள் ஆவார். கீதா வெண்பாவூரில் வசிக்கிறார். கீதாவுடன் அவரது மகன்கள் மற்றும் மகள் வசித்து வருகிறார்கள். அவரது மகன்கள் பெயர் அபிமன்யூ மற்றும் தமிழ்வாணன் என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கு ஆமினாபிபி சரவணன் உடைய இடத்தை அடமானம் போட்டதை மீட்பதற்காக வழக்கு போட்டுள்ளார். அந்த நிலத்தை நான் பார்த்துள்ளேன். அந்த நிலத்தை அடமானம் வாங்கியவர் யார் என்று எனக்கு தெரியாது. தலைவாசல் காரர் போட்டுள்ளதாக சொன்னார். பத்திரத்தை என்னிடம் காட்டவில்லை. இந்த வழக்கில் ராமஜெயம் சாட்சி சொன்னது எனக்கு தெரியும். ராமஜெயம் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. ராமஜெயம் சாட்சி அளித்துள்ளதாக என்னிடம் சொன்னார். நாகராஜ் என்பவர் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் சொல்லி தான் அது எழுதப்பட்டது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லவில்லை என்றும், தட்டச்சு செய்யப்பட்டிருந்த தாளில் நான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நாகராஜ் என்பவர் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இருப்பது போல அச்சுஅசலாக உள்ளது என்றால் எனக்கு தெரிந்ததை நான் சொன்னேன். நான் சொல்லி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்படாததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் டிராக்டர் வைத்து வாடகைக்கு உழுது வருகிறேன். அவர் எவ்வளவு கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அவர் எழுதி கொடுத்த பத்திரத்தையும் நான் பார்க்கவில்லை. எனக்கும் ஆமினாபிபிக்கும் ஐந்து வருடம் பழக்கம். ஆமினாபிபி வெண்பாவூரில் எல்லையில் இருக்கிறார். நான் அவரை 2 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தேன்.

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. என்னை சாட்சியம் சொல்ல அழைத்து வந்தவர் கீதா. எனக்கு கீதா சொல்லி தான் விவரம் தெரியும் என்று சொன்னால், ஆமினாபிபி சொல்லி தான் எனக்கு தெரியும். என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**1 மற்றும் 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.**

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.